DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. STC 1694/2024

Prosecution Witness 4

| | | | |
|---|---|---|---|
| Name | : தெய்வேந்திரன் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.ராஜு | Calling | : உதவி ஆய்வாளர் |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 59 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd day of March 2026.

(1 முதல் 4எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்)

முதல் விசாரணை:–

1. நான் தற்போது ஆனைமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2024ம் வருடம் நிலையத்தில் சமுத்திரபாண்டியன் என்பவர் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராகவும் முருகானந்தம் என்பவர் உதவி ஆய்வாளராகவும் பணி புரிந்து வந்தார்கள். அவர்கனது கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயம். கடந்த 20.04.2024 அன்று பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியா கசிகிக்சையில் இருந்த கிருஷ்ணசாமி என்பவரை விசார்ணை செய்து புகைா வாக்குமூலமாக பெற்று நிலைய குற்ற எண்.249/2024, இதச பிரிகள் 294(பி), 323, 506(1)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை நடராஜ் மற்றும் கார்த்திக் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது. சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அசா 1க்கு மருத்துவம் செய்த மருத்துவர் சங்கமித்ரா அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடம் இருந்து காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு பெறப்பட்டுள்ளது.

3. எதிரிகளை கைது செய்யவில்லை. வழக்கு விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது, (முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், வரைபடம், காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு ஆகிய ஆவணங்கள் **அசாஆ 2 முதல் அசாஆ 5** வரை ஆவணங்களாக குறியீடு செய்யப்படுகிறது).

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை :

4. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு

**ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கேற்ப நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.**

**<u>மறுவிசாரணை</u> – இல்லை**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.